என்பதைத் தங்கள் மூலம் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 57-க்கு முன்பு உருமினர்கள், 15 பேர்களாக வந்து உட்கார்ந்தோம்; அதன் பிறகு 62-ல் உருமினர்கள், 50 பேர்களாக வந்தோம். அதற்கும் பிறகும் அன்றைக்கு 138 பேர்களாக இருந்தோம். அதன் பிறகும் உருமல்களுக்கும் பொருமல்களுக்கும் இடையிலே இன்றைக்கு 183 பேர்களாக உட்கார்ந்து கொண்டிருக்கிறோம் இந்தச் சட்டமன்றத்திலே என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முதுகளத்தூர் சிங்கம் முத்துராமலிங்கத் தேவருடைய உருமலைவிடவா இவர்கள் உருமல்? தலையையே கேட்டாரே. அந்தச் சிங்கத்தின் குட்டிகளெல்லாம் இன்றைக்கு நம்முடைய பக்கத்தில் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தாராளமாக எந்த நடவடிக்கையானாலும், தைரியமாக எடுங்கள்; உரிமைக்குக் குரல் கொடுங்கள், உறவுக்குக் கை கொடுங்கள், உங்களுக்காக உயிரைக் கொடுக்க ஆயிரம் ஆயிரம் பேர்கள் தயாராக இருக்கிறோம் என்பதை இந்தச் சட்டமன்றத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்னால் பார்ப்பதோடு, பக்கத்திலே பாருங்கள், பின்னாலே பாருங்கள், உங்கள் சொல்லை நிறைவேற்ற லட்சம் லட்சம் பேர்கள் காத்திருக்கிறார்கள் தமிழகத்தில் என்பதை உங்கள் மூலம் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் முதல்வர் பாதையில் இன்றும் என்றும் தொடர்ந்து செல்லக் காத்திருக்கிறோம், தொடர்ந்து உங்கள் வழியில் செல்லுங்கள் என்று உற்சாகம் ஊட்டக் காத்திருக்கிறோம் என்று சொல்லி, என்னுடைய தொகுதி பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று நேரம் ஆகிவிட்டது. நாளைக்குத் தொடர்ந்து பேசுங்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பிறகு பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

39. Notification issued with G.O. R. No. 2263, Revenue, dated the 15th December 1971, in regard to exemption from liability to entertainments tax to the benefit film shows held in aid of National Defence Fund in the City of Madras and in the districts on 19th December 1971. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

40. Notification issued with Roc. No. 10296/71E-5, dated the 17th April 1971, in regard to extension of section 286 and relevant provisions relating to vital statistics under the Tamil Nadu District Municipalities Act, 1920, within the jurisdiction of the Avanashi Town Panchayat of Coimbatore district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

B. Reports, notifications and other papers.

* 43. Annual Plan 1972–73 (Narrative Notes on Programmes) (English and Tamil).

* 44. An Economic Classification of the Tamil Nadu Government Budgetary Transactions, 1972–73.

* 45. Detailed Budget Estimates of Revenue for the year 1972-73.

* 46. New Schemes (Tamil).

* 47. Budget Memorandum 1972–73 (English and Tamil).

* 48. Notice of Demands for Grants during the year 1972–73 (English and Tamil).

§ 49. Appendices to the Budget Speech (English and Tamil).

* 50. Annual Financial Statement (Budget) of the Government of Tamil Nadu (English and Tamil).

§ 51. The Budget Speech of the Hon. Chief Minister (English and Tamil).

52. Report of the Panchayat Education Finance Enquiry Committee in pursuance of the Assurance No. 29 of 1971.

---

* Laid on the Table of the House on 1st March 1972.

§ Circulated among the Members on 1st March 1972.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
23 JUN 1972
MADRAS